# பாடம் 11: மோசே
# (ஒரு தேசத்துடனான உடன்படிக்கை 1)

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

| | |
|---|---|
| அடிப்படை நிலை (7 வயது) | : 1 முதல் 14 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| இடைப்பட்ட நிலை (10 வயது) | : 1 முதல் 14 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| மேம்பட்ட நிலை (13 வயது) | : 1 முதல் 18 கருத்துகளைக் கற்பிக்கவும் |

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**

முந்திய பாடத்தில், ஆபிரகாமுக்கு ஆசி வழங்குவதாக அளித்த வாக்குறுதியின் வழியாக கடவுள் அவருடன் ஓர் உடன்படிக்கையை நிறுவினார், இந்த வாக்குறுதி அவரது மகன் ஈசாக்கு வழியாகவும், தொடர்ச்சியாக ஈசாக்கின் மகன் யாக்கோபின் வழியாகவும் நிறைவேறியது என்பதை நாம் கற்றோம். யாக்கோபுக்கு பன்னிரு மகன்கள் இருந்தனர், மேலும் யோசேப்பு (பதினோராவது மகன்) வழியாக கடவுள் அவர்களைப் பஞ்சத்தில் இருந்து மீட்டதால், அவர்கள் முழு குடும்பமாக எகிப்தில் வசதியான வாழ்வு வாழ்ந்தனர். இந்த பாடத்தில், அவர்களின் வழிமரபினருக்கு எகிப்தில் என்ன நிகழ்ந்தது என்பதைப் பற்றி நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**

1. யாக்கோபு இறந்ததும், யோசேப்பும் அவரது சகோதரர்களும் அவரை கானானில் அடக்கம் செய்தனர், ஆனால் அவர்கள் அனைவரும் திரும்பிச் சென்று எகிப்தில் தங்கள் வாழ்வைத் தொடர்ந்தனர் (தொடக்க நூல் 50:5-14). படிப்படியாக, யோசேப்பும் அவரது சகோதரர்களும், அவர்களின் தலைமுறையைச் சார்ந்த மக்கள் அனைவருமே எகிப்தில் இறந்தனர் (விடுதலைப் பயணம் 1:1-6). அவர்களின் வழிமரபினர் எகிப்தில் பெருமளவில் இருந்தனர் (விடுதலைப் பயணம் 1:7), மேலும் யோசேப்பு தங்கள் நாட்டுக்குச் செய்ததை பார்வோன் நினைவில் கொண்டிருந்ததால் அவர்கள் மிகவும் வசதியான வாழ்வு வாழ்ந்தனர்.

ஆனால் படிப்படியாக, யோசேப்பை நினைவில் கொள்ளாத அல்லது தேசத்தின் வரலாற்றில் அக்கறை கொள்ளாத புதிய பார்வோன் ஒருவன் தோன்றினான் (விடுதலைப் பயணம் 1:8). இந்தப் புதிய ஆட்சியாளன் எகிப்தில் இருந்த இஸ்ரயேலரை ஓர் அச்சுறுத்தலாகக் கண்டான், ஏனெனில் அவர்களின் நாட்டில் இஸ்ரயேலரின் மக்கள்தொகை எண்ணற்றதாக இருந்தது (விடுதலைப் பயணம் 1:9). இஸ்ரயேலரின் எண்ணிக்கை (யோசேப்பின் சகோதரர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள்) 70 பேரில் இருந்து இருபது லட்சம் (இரண்டு மில்லியன்) பேராக தற்போது அதிகரித்திருந்தது. மறைநூலின் படி, பெண்களையும் குழந்தைகளையும் சேர்க்காமல் ஆண்கள் மட்டும் ஆறு லட்சம் பேர் இருந்தனர் (விடுதலைப் பயணம் 12:37). ஒரு நாள் எகிப்து போருக்குச் செல்ல, இஸ்ரயேலர் அவர்களின் எதிரிகளோடு சேர்ந்துகொண்டால் என்ன நிகழும்? இந்தப் புதிய ஆட்சி எகிப்தில் ஒடுக்குமுறை மற்றும் வன்முறையின் ஒரு காலத்தைத் தொடங்கியது. புதிய பார்வோன் இஸ்ரயேலரைக் கட்டாயப்படுத்தி அடிமைகளாக மாற்றினான், எகிப்தில் இரண்டு நகர்களில் பெரும் கட்டுமானங்களை எழுப்புவதற்கான செங்கல் தயாரித்தல் போன்ற கடின வேலைகளிலும், வயல்களில் தொழிலாளர்களாகவும் அவர்களைப் பயன்படுத்தினான் (விடுதலைப் பயணம் 1:11-14). அவர்களுக்குப் போதிய உணவு வழங்காமல் அவர்களிடம் முடிவின்றி வேலை வாங்கினர். பின்னர், புதிதாகப் பிறக்கும் ஒவ்வோர் எபிரேய (இஸ்ரயேலிய) ஆண் குழந்தையையும் எகிப்து நதியில் எறிந்து விடுமாறும் பார்வோன் ஆணையிட்டான். இஸ்ரயேலரின் மக்கள்தொகையைக் குறைப்பதற்காக இந்தக் குழந்தைகளின் படுகொலை நிகழ்ந்தது. இத்தகைய முயற்சிகளின் நடுவிலும், ஆபிரகாமின் வழிமரபினரைக் கொண்டு வலிமையான ஒரு தேசத்தைக் கட்டியெழுப்பும் கடவுளின் திட்டத்தை எதுவும் தடுக்க முடியவில்லை (தொடக்க நூல் 12:1-3).

2. கடவுள் உண்மையில் இஸ்ரயேலரை அடிமைத்தனத்திற்குள் கட்டாயமாக அனுமதித்தார், அதனால் அவர்கள் எகிப்திய சமூகத்தில் இருந்து பிரிக்கப்பட முடிந்தது. மற்றொரு விதத்தில், அவர்கள் எகிப்தில் மிகவும் வசதியான வாழ்வு வாழ்ந்தனர், அதாவது எகிப்தியரின் வழியை மகிழ்ச்சியோடுத் தம்வயப்படுத்திக் கொண்டு, கடவுளின் மக்கள் என்னும் தங்களின் அடையாளத்தை மறந்தனர். உண்மையில், இந்நேரத்திற்குள் ஏற்கெனவே அவர்கள் எகிப்திய மூடநம்பிக்கைகள் மற்றும் சிலைவழிபாடுகளை ஏற்றுக்கொண்டு கடவுளுக்கு எதிராகப் பாவம் செய்து வந்தனர். (உயர்க்குடி பிரபுக்களை ஒத்த) மேல்த்தட்டு மக்களாக இருந்த அவர்கள் தற்போது அன்றாடக் கடின வேலைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களின் உடல்கள்

அத்தகைய வேலைக்குத் தயராக அல்லது பயிற்சி பெற்றவையாக இல்லை. இதன் காரணமாக, அடிமைத்தனம் மட்டுமே அவர்களை எகிப்தில் இருந்து வெளியேறத் தூண்டும் ஒரே வழியாக இருந்தது. கடவுள் அவர்களை எகிப்தில் இருந்து வெளியேறக் கட்டாயப்படுத்த விரும்பவில்லை, அவர்களே ஆசைப்பட்டு வெளியேற வேண்டுமென விரும்பினார், அதனால் தங்களுக்குச் சொந்தமில்லாத நாட்டில் இருந்து வெளியேறுவதற்காக அவர்கள் மகிழ்ச்சி அடைய முடியும். இதனிடையே, இஸ்ரயேலர் கடவுளிடம் உதவி வேண்டிக் கூக்குரலிட்டனர் (விடுதலைப் பயணம் 3:7).

நமது வாழ்விலும் நமது பாவங்கள் மற்றும் நமது கீழ்ப்படியாமைக்காக நாம் துன்புறும்படி கடவுள் அனுமதிக்கும் நேரங்கள் இருக்கின்றன. அதனால் நாம் இந்த பாவம் மற்றும் கீழ்ப்படியாமையை நிறுத்த நாம் விரும்புவோம். நமது பாவம் மற்றும் கீழ்ப்படியாமையிலும் வாழ்வு தொல்லையின்றித் தொடர்ந்தால், நாம் பாவம் செய்வதை நிறுத்த விரும்புவது நமக்கு கடினமாக இருக்கும். நம்மை பாவம் மற்றும் கீழ்ப்படியாமையின் நோய்க்கு ஆளாக்கும் தவறானத் தெரிவுகளின் பின்விளைவாக கடவுள் துன்பத்தை அனுமதிக்கலாம். அவர் அப்படிச் செய்தால், அதற்கு ஒரே காரணம் அவர் நம்மை அன்பு செய்கிறார், மேலும் நாம் சரியானப் பாதைக்குத் திரும்ப வேண்டுமென விரும்புகிறார் என்பதே.

3. புதிதாகப் பிறந்த எபிரேயக் குழந்தைகளை நீரில் மூழ்கடித்துக் கொல்ல பார்வோன் ஆணையிட்டிருந்த வேளையில், யோக்கபேது என்ற லேவியப் பெண்மணி தமது இளைய மகனாக மோசேயைப் பெற்றெடுத்தார். அவர் மோசேயை மூன்று மாதங்கள் மறைத்து வைத்திருந்தார், ஆனால் அவ்வாறு தொடர்ந்து செய்ய முடியாது என்று அவர் கண்டறிந்தார். அவர் தண்ணீர் புகாத பேழை ஒன்றுக்குள் தமது குழந்தையை மறைத்து வைத்து, நைல் நதியில் மிதக்க விட்டார், அங்கு குளிக்கவந்த பார்வோனின் சொந்த மகள் அக்குழந்தையைக் கண்டெடுத்தாள். பார்வோனின் மகள் தாம் ஓர் எபிரேயக் குழந்தையைப் பார்த்துக் கொண்டிருந்ததை உணர்ந்து, அதன் மீது பரிவு கொண்டாள்.

தொலைவில் ஒளிந்திருந்த (குழந்தையின் மூத்த சகோதரி) மிரியாம், பார்வோனின் மகளிடம் வந்து குழந்தைக்கு பாலூட்ட எபிரேயச் செவிலித்தாய் ஒருவரை அழைத்து வரலாமா என்று அனுமதி கேட்டாள். பார்வோனின் மகள் ஒப்புக்கொண்டதும், மிரியாம் விரைந்து சென்று தமது தாயை (யோக்கபேதை) அழைத்து வந்தாள், அவர் குழந்தையைக் கவனித்துக் கொள்ளுமாறு பார்வோனின் மகளால் பணிக்கு அமர்த்தப்பட்டார். யோக்கபேது குறிப்பிட்ட வயது வரை தமது சொந்த மகனுக்குப் பாலூட்டி வளர்த்தார், பிறகு அவனை பார்வோனின் மகளிடம் அழைத்து வந்தார், அவள் அவனைத் தமது சொந்த மகனாக வளர்த்தாள். ஆகவே மோசே எகிப்தின் இளவரசனாக வளர்ந்தார், ஆனால் தாம் ஓர் எபிரேய வழிமரபினன் என்பதை ஒருபோதும் மறக்கவில்லை. (விடுதலைப் பயணம் 2:1-10)

4. ஒரு நாள், எபிரேய அடிமையை அடித்த எகிப்தியன் ஒருவன் மீது சினமுற்ற மோசே அவனைக் கொன்றுவிட்டார். வெளிப்படையாக, மோசே தம் மக்கள்மீது பற்று கொண்டிருந்தார். பார்வோன் இது குறித்து அறிந்ததும், அவன் மோசேயைக் கொல்ல விரும்பினான், ஆனால் மோசே தொலைவாக ஓடி மிதியான் என்ற மற்றொரு நாட்டை அடைந்தார். அங்கு, அவர் சிப்போரா என்றப் பெண்ணை திருமணம் செய்து கொண்டார், அவர் ஒரு மகனைப் பெற்றெடுத்து கேர்சோம் என்ற பெயரிட்டார்.

5. மோசே தமது மாமனார் இத்திரோவுக்கு உதவியாக அவரது மந்தைகளை 40 ஆண்டுகள் மேய்த்து வந்தார். ஒரு குறிப்பிட்ட நாளில், அவர் ஓரேபு என்ற மலைக்குத் தமது மந்தையைக் கொண்டு வந்தார். அங்கு, மோசேக்கு கடவுள் தீயினால் கருகாத ஓர் எரியும் முட்புதரில் தோன்றினார். கடவுள் தம்மை மோசேக்கு அறிமுகம் செய்து கொண்டார், அவர் எகிப்தியராக வளர்க்கப்பட்டதாலும், எகிப்தியத் தெய்வங்களிடம் செபித்து வளர்ந்ததாலும் அநேகமாக கடவுளை அறியாதவராக இருந்திருக்கலாம்: “நான் உன் மூதாதையரின் கடவுள், ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள்” (விடுதலைப் பயணம் 3:6).

6. மோசேயிடம் கடவுள், எகிப்தில் ஒடுக்கப்பட்ட தமது மக்களின் துன்பங்களைக் கண்டதாகவும் அவர்களின் கூக்குரலைக் கேட்டதாகவும், தாம் அவர்களை விடுவிக்க விரும்புவதாகவும் கூறினார். ஆகவே மோசேயை எகிப்துக்குத் திரும்புமாறு அறிவுறுத்திய கடவுள், அங்கு இஸ்ரயேலின் மூப்பர்களை ஒன்றுதிரட்டி, கடவுளுக்குப் பாலைநிலத்தில் பலி செலுத்த தங்களை விடுவிக்குமாறு பார்வோனிடம் கோரிக்கை விடுக்கச் சொன்னார். பார்வோன்

அவர்களை விடுவிக்குமாறு கடுமையான எதுவும் நிகழாத வரை அவன் அவர்களைப் போக விடமாட்டான் என்றும் மோசேயிடம் கடவுள் சொல்லியிருந்தார்.

எகிப்துக்குத் திரும்புமாறு கடவுள் விடுத்த ஆணையில் மோசேக்குத் தீவிர ஐயங்கள் இருந்தன, ஏனெனில் (சட்டத்திற்கு புறம்பான) எகிப்திய இளவரசனானத் தம்மை இஸ்ரயேலரை விடுவிக்க கடவுள் அனுப்பினார் என்றால், அவர்கள் தம்மை நம்புவார்களா என்று யோசித்தார். கடவுள் அவருக்கு மூன்று அற்புத அடையாளங்களை அவர்களுக்காகக் கொடுத்தார், இன்னும் மோசே ஐயத்தோடும் அச்சத்தோடும் இருந்தார், ஆகவே தாம் திக்கிப் பேசுவதைக் கருத்தில் கொண்டு இந்த அலுவலில் இருந்து விலக்கு அளிக்கக் கோரினார். மோசேயின் விசுவாசக் குறைவைக் கண்டு சினமுற்ற கடவுள், மோசேயின் மூத்த சகோதரர் ஆரோன் அவரது வாயாக இருப்பார் என்று அறிவித்தார். (விடுதலைப் பயணம் 3:1 - 4:17)

7. மோசே எகிப்தில் தாம் செய்த குற்றத்தின் காரணமாக தமது முதிர்ந்த வாழ்வின் பெரும்பகுதியை நிம்மதியின்றி கழித்தார். அதன் விளைவாக, அவர் எகிப்தில் இருந்து தப்பியோடி மிதியானில் இருந்தார். அங்கு, அவர் பல ஆண்டுகளாகத் தமது மாமனார் இத்திரோவின் ஆயராக இருந்தார். இது மிகவும் வசதியான அல்லது கவர்ச்சியான வாழ்வின் வழியாக இருந்தது. ஆனால் இதுவும் அவருக்கு முக்கியப் பயிற்சிக் காலமாக இருந்தது, கடவுள் தமது மக்களை எகிப்தில் இருந்து வாக்களிக்கப்பட்ட நாட்டுக்கு நடத்திச் செல்லும் அடுத்தக் கட்ட வாழ்விற்கு அவரைத் தயார் செய்தார்.

நமது வாழ்வில் கடவுள் குறிப்பாக எதுவும் செய்யாதது போன்று காணப்படும் பல பருவங்கள் இருக்கின்றன, மேலும் எவ்விதத்திலும் ஆர்வமாக முன்னோக்கிப் பார்க்க இயலாத சாதாரண சுழற்சிகளில் நாம் சென்று கொண்டிருக்கிறோம். ஆனால் நாம் ஏற்கெனவே செய்து கொண்டிருக்கிறதை விடச் சிறந்த எந்த வேலையை கடவுள் நமக்கு வழங்கவிருந்தாலும், நாம் தற்போது செய்து கொண்டிருக்கிற சாதாரண அலுவல்களுக்கான நம்பகம் மிக முக்கியமானது. நமது சாதாரண சுழற்சிகள் நம்மில் மனம், இதயம், மற்றும் ஆவியின் ஒழுங்கினைப் பண்படுத்துகிறது, அது கடவுளால் பெரும் பணிகளுக்கு அழைக்கப்பட்ட ஒரு நபருக்குத் துல்லியமாகத் தேவைப்படுகிறது.

8. இஸ்ரயேல் மக்களை விடுவிக்கும் அலுவலுக்கான சிறந்த வேட்பராக மோசே இருந்திருக்க முடியாது என்றும் தெரிகிறது. அவருக்கு நம்பிக்கை குறைவுபட்டதுடன், வன்மையாகப் பேச முடியாமலும் இருந்தது! ஆனால் கடவுள் தமக்கான வேலையை முடிக்கச் சிறந்த மனிதரை அழைக்க வேண்டிய அவசியமில்லை. வேலை தேவைப்படும் ஒரு நபரையும் அவர் அழைக்காமல் இருக்கலாம்! அவர் விரும்புகிறவரை அவர் அழைக்கிறார், மேலும் அந்த நபர் நாமாகவும் இருக்கலாம், அந்த நேரத்தில், அவரது அழைப்புக்கு கீழ்ப்படிதலுடன் விருப்பமாகப் பதிலிறுப்பது நம்மைப் பொருத்தது. நீங்கள் நிறைவேற்ற கடவுள் அழைக்கின்ற அலுவலுக்கு நீங்கள் மிகத் திறமையான நபராக இல்லாமல் இருக்கலாம். ஆனால் மோசேயின் வாயாக ஆரோனை கடவுள் அனுப்பியது போன்று, நீங்கள் செல்ல விரும்பினால், அந்த வேலை நடைபெற உதவியாக அவர் உங்களை அனுப்புவார்.

9. தயக்கத்துடன், மோசே எகிப்துக்குத் திரும்பி பார்வோனைச் சந்தித்தார். இஸ்ரயேலரை அடிமைத்தனத்தில் இருந்து விடுவிக்கமாறு அவர் பார்வோனிடம் கோரினார். ஆனால் பார்வோன் அந்த அடிமைகளை இழக்க விரும்பவில்லை, ஏனெனில் அவர்களின் ஊதியமற்ற வேலை எகிப்தின் பொருளாதாரத்துக்கு மிகவும் முக்கியமாக இருந்தது. கடவுள் மொத்தமாக பத்து பெருந்துன்பங்களை, ஒன்றன்பின் ஒன்றாக அனுப்பினார். ஒவ்வொரு பெருந்துன்பத்துக்கு முன்னும், என்ன நிகழப்போகிறது என்பதை பார்வோனுக்கு, இஸ்ரயேலரை விடுவிக்க அவனை இணங்கச் செய்வதற்காக இந்தப் பேரழிவுகள் கடவுளால் அனுப்பப்பட இருக்கின்றன என்று மோசே எச்சரிக்கிறார். முதல் ஒன்பது பெருந்துன்பங்களாவன: தண்ணீர் இரத்தமாக மாறியது (விப 7:17-18), தவளைகள் பெருகியது (விப 8:1-4), கொசுக்கள் பெருகியது (விப 8:16-17), ஈக்கள் பெருகியது (விப 8:20-22), கால்நடைகளின் சாவு (விப 9:1-4), கொப்புளங்கள் (விப 9:8-9), கல்மழை (விப 9:22-23), வெட்டுக்கிளிகளின் தாக்குதல் (விப 10:4-5), மற்றும் மூன்று நாட்கள் இருள் (விப 10:21-22).

10. பத்தாவது பெருந்துன்பம் மிகவும் மோசமானது (விடுதலைப் பயணம் 12:1-36ஐ வாசிக்கவும்). அது எகிப்தியர் நடுவே தலைப்பேறான அனைத்து குழந்தைகள் மற்றும் விலங்குகளின் இறப்பை உள்ளடக்கியது. பத்தாவது பெருந்துன்பத்தின் நாளில், அனைத்து இஸ்ரயேலியக் குடும்பமும் ஒரு வயதுள்ளதும் குறையற்றதுமான ஓர் ஆண் ஆட்டுக்குட்டியை வெட்டுமாறு அறிவுறுத்தப்பட்டது (சிறிய குடும்பங்கள் தங்கள் அடுத்திருப்போரோடு பகிர்ந்து

கொள்ளலாம்). இந்த விலங்கின் இரத்தம் ஈசோப்புப் கொத்தைக் கொண்டு இஸ்ரயேலரின் வீட்டின் நிலைக்கால்கள் மற்றும் மேல்சட்டத்தில் பூசப்பட வேண்டும் (விப 12:22). அந்த இரவில், அந்த விலங்கின் இறைச்சியைச் சுட்டு புளிப்பற்ற அப்பத்தோடு அந்தக் குடும்பத்தினர் இணைந்து விரைவாக உண்ண வேண்டும். அவர்கள் உண்ணும் பொழுது, எகிப்தில் இருந்து வெளியேறுவதை முன்குறிக்கும் விதத்தில் முழுமையாக ஆடை அணிந்திருக்க வேண்டும்: தங்கள் இடுப்பைச் சுற்றி இடைக்கச்சையும், தங்கள் பாதங்களில் காலணிகளும், தங்கள் கரங்களில் கோலும் கொண்டிருக்க வேண்டும். இந்த இரவுக்குப் பிறகு, இஸ்ரயேலர் இதை தமது மாண்புக்காக ஒரு விழா நாளாக தலைமுறைதோறும் ஒவ்வோர் ஆண்டும் கடைபிடிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார் (விப 12:14-20).

11. இந்தப் பத்தாவது பெருந்துன்பத்தில், பார்வோனின் சொந்த மகனும் கொல்லப்பட்டான், அதன் விளைவாக இஸ்ரயேலரை விடுவிக்க அவன் ஒப்புக்கொண்டான். ஆனால் பார்வோன் மிக விரைவில் தனது மனத்தை மாற்றிக் கொண்டு, வெளியேறிக் கொண்டிருந்த இஸ்ரயேலரை மீண்டும் பிடித்துவர தேர்களில் தனது படையை அனுப்பினான். முதல் நூற்றாண்டு வரலாற்றாளர் யோசேப்புஸ், தமது *தொன்மைக்காலங்கள்* என்ற நூலில், பார்வோனிடம் 600 தேர்களும், 50,000 குதிரைவீரர்களும், 200,000 காலாட்படையினரும் இருந்ததாகக் கூறுகிறார்.

12. விடுதலைப் பயணம் 14:5-31ஐ வாசிக்கவும். பார்வோனின் படையினர் தங்களுக்குப் பின்னே வருவதை இஸ்ரயேலர் கண்டதும், அவர்கள் பயந்தனர், ஆனால் நெருப்பு மற்றும் மேகத்தின் தூண் எகிப்தியப் படையினரிடம் இருந்து அவர்களைப் பிரித்தது. அவர்கள் செங்கடலில் சிக்கிக் கொண்ட பொழுது, கடவுளின் ஆணைப்படி மோசே தமது கோலைத் தண்ணீரின் மீது நீட்ட, இரவு முழுவதும், ஒரு வலுவான காற்று கடலைப் பிளந்தது, இரு புறங்களிலும் தண்ணீர் சுவராக நிற்க ஒரு வறண்ட நிலப்பாதை உருவானது. இஸ்ரயேலர் அந்தப் பாதை வழியே எளிதாக நடந்து சென்றனர். எகிப்தியப் படையினர் அவர்களைப் பிடிக்க முயன்றனர், ஆனால் அவர்களது தேர்களின் சக்கரங்கள் புதைவுறவும் அவர்கள் அஞ்சி நடுங்கவும் கடவுள் செய்தார். தண்ணீர் மீண்டும் பாதையை மூடத் தொடங்கிய பொழுது, பார்வோனும் அவனது படையினரும் முழுவதும் அழிந்தனர். இஸ்ரயேலர் தங்கள் வீட்டை விட்டுப் புறப்பட்ட அதே நாளில் எகிப்தை விட்டு வெளியேறினர். செங்கடலைக் கடந்ததும் உடனடியாக, அவர்கள் சீனாய் பாலைநிலத்தில் இருந்தனர். அவர்கள் கடவுளின் வல்லமையைக் கண்டு, அவரில் தங்களது விசுவாசத்தை வைத்தனர். அவர்கள் ஆண்டவருக்கு ஒரு புகழ்ப்பாடல் பாடினர் (விடுதலைப் பயணம் 15:1-19).

13. அவர்கள் சீனாய் பாலைநிலத்தை அடைந்த பொழுது, மக்கள் தங்களோடு ஆட்டு, மாட்டு மந்தைகளையும் புளிக்காத மாவையும் வைத்திருந்தனர் (விடுதலைப் பயணம் 12:34,39). பாலைநிலத்தில், அவர்கள் தாங்கள் உண்பதற்காகப் புளிப்பற்ற அப்பங்களைச் சுட்டனர். அவர்கள் எகிப்தில் இருந்து வெளியேறிய பொழுது அவர்களது அவசரத்தின் அடையாளமாகப் புளிப்பற்ற அப்பம் இருந்தது.

அவர்கள் எகிப்தில் இருந்து வெளியேறியதன் நினைவாக, இஸ்ரேலியக் குடும்பம் அனைத்தின் முதற்பேறும், அவர்களது கால்நடைகளின் முதற்பேறுகள் உள்பட அனைத்தும் கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டன (விப 13:1-16). அவர்களைப் பாதுகாப்பதில் கடவுளின் உதவியின்றி, அந்த கடப்பின் (பாஸ்கா) இரவில் அவர்களின் முதற்பேறுகள் பிழைத்திருக்க முடியாது.

14. அவர்கள் தங்களோடு யாக்கோபின் மகனான யோசேப்பின் எலும்புகளையும் எடுத்துச் சென்றனர். இஸ்ரயேலர் கானானுக்குத் திரும்பும் நாளில் தமது எலும்புகளை அங்கு எடுத்துச் செல்ல வேண்டுமென தாம் இறக்கும் முன்பு யோசேப்பு கேட்டிருந்தார் (விப 13:19, தொநூ 50:25).

15. உண்மையில், இஸ்ரயேலர் எகிப்தில் வாழ்வர் என்பதை அவர்களின் மூதாதையான ஆபிரகாமிடம் ஏற்கெனவே முன்னறிவித்திருந்தார்.

தொடக்க நூல் 15:13-14: "யாவே ஆபிராமிடம், 'நீ உறுதியாக அறிந்துகொள்ள வேண்டியது: உன் வழிமரபினர் வேறொரு நாட்டிற்குப் பிழைக்கச் செல்வர், அங்கே அவர்கள் நானூறு ஆண்டுகள் அடிமைகளாகக் கொடுமைப்படுத்தப்படுவர். அவர்கள் அடிமை வேலை செய்யும் நாட்டிற்குத் தண்டனைத் தீர்ப்பு வழங்குவேன், அதற்குப்பின் மிகுந்த செல்வங்களுடன் அந்நாட்டை விட்டு அவர்கள் வெளியேறுவர்.'"

(காலத்தைக் குறித்து ஆண்டுகளில் சுட்டப்படுவதை அப்படியே எடுத்துக்கொள்ளக் கூடாது, அது அநேகமாக தலைமுறையினரின் எண்ணிக்கையைச் சுட்ட அல்லது முழுமையான எண்ணில் குறிப்பிடத் தரப்பட்டுள்ளது.)

16. முதல் நூற்றாண்டு யூத வரலாற்றாளர் யோசேப்புஸ், ஆபிரகாமும் அவரது வழிமரபினரும் யோசேப்பு அவர்கள் குடும்பத்தினரை எகிப்துக்கு புலம்பெயரச் செய்யும் வரை 215 ஆண்டுகள் கானானில் வாழ்ந்தனர், அப்போது முதல், அடிமைத்தனத்தில் இருந்து விடுவிக்கப்படும் வரை மற்றொரு 215 ஆண்டுகள் இஸ்ரயேலர் எகிப்தில் வாழ்ந்ததாக எழுதியுள்ளார். (“எகிப்தில் குடியிருந்த இஸ்ரயேல் மக்கள் அங்கு வாழ்ந்த காலம் நானூற்று முப்பது ஆண்டுகள்” என்று விடுதலைப் பயணம் 12:40 கூறினாலும், “இஸ்ரயேலர் எகிப்திலும் கானானிலும் செலவிட்ட காலம் நானூற்று முப்பது ஆண்டுகள்” என்று பழைய ஏற்பாட்டின் முற்காலக் கைப்பிரதிகள் கூறுகின்றன.)

17. கடவுள் தம்மை எரியும் முட்புதரில் மோசேக்கு வெளிப்படுத்திய பொழுது, அது மோசேயின் கவனத்தைக் கவர்ந்தது மேலும் அவர் அதைப் புறக்கணிக்கவில்லை. அவர் அந்த தூய நெருப்பு உண்மையில் என்னவென்று கண்டறிய முயன்றதில் அவர் கடவுளை அணுகினார். அதன் விளைவாக, மோசேயின் எரியும் முட்புதர் அனுபவம் கடவுளுடனான நெருக்கமானச் சந்திப்பாக மாறியது. அது தம்மை மோசேக்கு அறிமுகப்படுத்திக் கொண்ட கடவுளது நட்புறவின் தொடக்கமாக இருந்தது. வெறும் தெளிவற்ற உணர்வுகளைத் தாண்டி, இந்தச் சந்திப்பு மோசேயின் வாழ்வை உருமாற்றியதுடன், தமது எஞ்சிய வாழ்வு முழுவதும் அவர் திரும்பிப் பார்க்காமல் தழுவிக் கொண்ட ஓர் அழைத்தலுக்குள் அவரைத் தள்ளியது

நமது வாழ்வில், பல விதங்களில், தமது நிகழ்மையை நாம் அறியச் செய்யும் கடவுள், சில நேரங்களில் மற்ற நேரங்களை விடவும் மிகத் தெளிவான விதங்களில் தோன்றுகிறார். அவரது “தோற்றங்கள்” எவ்வளவு மென்மையாக அல்லது வெளிப்படையாக இருந்தாலும், அத்தகைய வாழ்வை மாற்றும் திறனுள்ளச் சந்திப்புகளுக்கு நமது இதயங்களைத் திறப்பது தேவை, அதனால் “எரியும் முட்புதர்” தோன்றும் இடத்தில் நாம் அதைத் தவறவிட மாட்டோம். அத்தகைய சந்திப்புகள் நம்மை கடவுளுடன் உரையாடவும், அவரை நெருக்கமான விதத்தில் அறியவும் அனுமதிக்கின்றன. அவை நம்மை கடவுளின் வாழ்விற்குள் இழுக்கும் அவரது வழியாக இருக்கின்றன.

எனினும், இந்த சந்திப்புகள் நமக்கு உணர்ச்சிகளின் உச்சத்தை அளிப்பவையல்ல என்பதில் நாம் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். சில நேரங்களில் அவை உணர்ச்சிப்பூர்வ அனுபவங்களாக இருந்தாலும், அவை நம்மில் ஆழ்ந்த உருமாற்றத்தை விளைவிக்க வேண்டும் என்பது மிக முக்கியமானது. மோசேயின் எரியும் முட்புதர் அனுபவத்தின் விளைவாக ஒரு குறிப்பிட்ட எய்துபணிக்கு அவர் அனுப்பப்பட்டார். ஒவ்வொரு எரியும் முட்புதர் அனுபவமும் ஒரு தேவையோடு இணைந்து வருகிறது, கடவுள் மற்றும் உலகில் உள்ள அவரது திருச்சபையின் எய்துபணியில் பங்கேற்கும் அலுவலுக்காக நம்மைப் பிரித்தெடுக்கிறது.

18. மோசேயும் இஸ்ரயேலரும் செங்கடலைக் கடந்த நிகழ்வு உண்மையில் நிகழ்ந்ததா? 1970களில் இருந்து, கிறிஸ்தவ மறைநூலை கற்றறியும் மதச்சார்பற்ற நூலறிஞர்கள் விவிலியத்தை ஒரு தொன்மமாகக் குறைக்க முயற்சிக்கின்றனர். மற்றவர்களின் நடுவே, ஜோனத்தன் வான் செட்டர் மற்றும் தாமஸ் எல். தாம்ப்சன் போன்ற நூலறிஞர்கள், விவிலிய முதுவர்களின் நிகழ்வுரைகளில் காணப்படும் நபர்கள் உண்மையில் வாழ்ந்தவர்கள் அல்லர் என்ற நம்பிக்கைக்கு வந்துள்ளனர். மற்ற வார்த்தைகளில், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, மற்றும் மோசே, மேலும் அத்தகைய பலரும் உண்மையில் கட்டுக்கதைகளின் “நாயகர்கள்”, அதாவது அவர்களில் நம்பிக்கை கொண்டுள்ளோரின் மனவுறுதியை ஊக்குவிக்கவும், யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு ஓர் அடையாளத்தை வழங்கவுமே அவர்கள் உள்ளனர்.

பொதுவாக, அத்தகைய கட்டுக்கதைகள் (“தொன்மங்கள்” என்றும் அழைக்கப்படுகின்றன) அதைக் கேட்போரின் மனவுறுதியை ஊக்குவிக்கத் தொகுக்கப்பட்டவை என்றால், இந்த உருவமைவுகள் குறையற்றப் பதங்களில் விவரிக்கப்பட்டிருக்க வேண்டும். அவை நேர்த்தியாக மற்றும் குறையற்றவையாக இருந்திருக்க வேண்டும், அவர்களின் வாழ்க்கைத் தொகைமங்கள் நாணச் செய்யாதவையாக இருந்திருக்க வேண்டும். ஆனால் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, மற்றும் மோசே போன்ற முதுவர்களை நோக்குவோம். ஆபிரகாம் ஒரு வாரிசை உருவாக்கத் தமது பணிப்பெண்ணுடன் படுத்தார், இந்த அறநெறி பிரச்சனை அவரது குடும்பத்தில் ஒரு

கொந்தளிப்பை உருவாக்கியது. ஈசாக்கு ஒரு தந்தையாக, பண்பினைத் தவறாக மதிப்பிட்டு, தமது எதிர்காலம் குறித்து கவலை கொண்டிருந்த மகனை விடுத்து, அது பற்றி உணர்வற்ற மகனை ஆதரித்தார். யாக்கோபு ஒரு பொய்யராக இருந்து தமது சகோதரர் ஏசாவின் பிறப்புரிமையை ஏமாற்றிப் பெற்றுக்கொண்டார். யோசேப்பு, யாக்கோபின் பன்னிரு மகன்களில் அவருக்குப் பிடித்தமான பதினோராவது மகன், திமிரும் தற்பெருமையும் கொண்டிருந்தார். மோசே ஒரு தயக்கமுள்ள தலைவராக பேச்சு வன்மையற்றவராக, கடவுளுக்கு எப்பொழுதும் முழுமையாகக் கீழ்ப்படியாதவராக இருந்தார். இந்த உருவமைவுகள் மனவுறுதியையும் விசுவாசத்தையும் தூண்ட வடிவமைக்கப்பட்டவை எனில், நேர்மையாக அவர்கள் அத்தகைய ஆற்றலுள்ளவர்களாக இல்லை.

இன்னும், தூண்டுதல் மற்றும் அடையாளத்திற்காக மட்டுமே உருவாக்கப்படும் கதைகள், உண்மை நபர்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டாலும், காலப்போக்கில் அவர்கள் தூய்மைப்படுத்தப் பெற்று, இலக்கியங்களில் அவர்களின் பண்புநலன் விவரிப்புகள் குறையற்றவையாகவும் நேர்த்தியாகப் பின்பற்றத் தகுந்தவையாகவும் இருந்திருக்க வேண்டும். ஆனால் பழைய ஏற்பாட்டில், குறிப்பாக முதுவர்களின் உருவமைவுகளின் தொகைமங்கள் அவ்விதமாகக் காணப்படவில்லை. அவர்களின் நேர்த்தியின்மைகள் மற்றும் குறைகள் மறைக்கப்படுவதற்குப் பதிலாக பாதுகாக்கப்பட்டதாகத் தெரிகிறது. மனிதரில் நம்பிக்கை கொள்வதை விடவும், கடவுளின் அன்பு, அருள் மற்றும் இரக்கத்திற்காக நன்றியைத் தூண்டும் விதத்தில் அவர்களின் கதைகள் கூறப்பட்டுள்ளன. மனிதர்கள் குறையுள்ளவர்களாக, பாவம் செய்கிறவர்களாக, மற்றும் நேர்த்தியற்றவர்களாக இருந்தாலும் கடவுள் நம்பகமானவராக இருக்கிறார் என்பதை அவை நமக்குக் கற்பிக்கின்றன.

ஆகவே, விடுதலைப் பயணம் உண்மையாகவே நிகழ்ந்ததா, அல்லது பழைய ஏற்பாட்டு முதுவர்கள் உண்மையில் வாழ்ந்தார்களா என்பது போன்ற கேள்விகள் கேட்கப்படும் பொழுது, ஒருவேளை அத்தகையக் கேள்விகளைச் சரிசெய்வது தவறான கதாநாயகர்கள் மீதிருக்கிறது. முக்கியமான கேள்வி இந்த நபர்கள் உண்மையில் வாழ்ந்தார்களா மேலும் அவர்கள் நம்பத் தகுந்தவர்களா என்பதைப் பற்றியதன்று, மாறாக, கடவுள் நம்பகமானவரா மேலும் அவரது விருப்பத்தை நிறைவேற்ற அனைத்து மனிதர்கள் நடுவிலும் வலுவற்றோரைப் பயன்படுத்த இயலுமா என்பதே. இந்த முதுவர்களின் உருவமைவுகள் வடிவமைக்கப்பட்டவை என்பதை விடவும், மெய்யானவை என்று நம்புவதே சிறந்தது, ஏனெனில் அவர்களின் குறைகளின் விவரிப்புகள் மனித மெய்மையைச் சார்ந்தவை; ஆனால் அதைக்கொண்டு மனதை நிரப்புவது அவர்களின் வாழ்க்கைத் தொகைமங்களின் கருத்தைத் தவறவிடச் செய்துவிடும்.

இந்த நபர்கள் வாழ்ந்ததை ஐயமுறும் இலக்கிய அறிஞர்கள், அறிவியலாளர்கள், மற்றும் அகழாய்வாளர்கள் ஆகியோர் அகழாய்வுக் கண்டுபிடிப்புகள் போன்ற அறிவியல் சான்றுகள் அடிப்படையில் தங்கள் முடிவை எடுக்கின்றனர். வேறுபட்ட அகழாய்வாளர்கள் வேறுபட்ட விடயங்களைக் கண்டறிகின்றனர் அல்லது கண்டறியாமல் விடுகின்றனர், அவர்களின் கண்டுபிடிப்புகள் பல பதின்மாண்டுகளில் வேறுபட்ட முடிவுகளுக்கு இட்டுச் செல்கின்றன. நேரம் வருகிற பொழுது, அவர்கள் முதுவர்களின் நூல்களில் விவரிக்கப்பட்டுள்ள நிகழ்வுகளுக்கான கூடுதல் சான்றை அவர்கள் கண்டறியலாம். எடுத்துக்காட்டாக, வளிமண்டல ஆய்வுக்கான அமெரிக்க தேசிய மையம், விடுதலைப் பயணத்தில் விவரிக்கப்பட்டுள்ளது போல வலுவானக் கீழைக்காற்று இரவு முழுவதும் வீசி செங்கடல் தண்ணீரைப் பிரிக்க முடியும் என்பது தங்கள் கணினி உருவகிப்பில் தெரிந்துள்ளதாக 2010ல் அறிவித்தது. உறுதியாக, அறிவியலாளர்கள் தங்களது வேலையைச் செய்யுமாறு நாம் விட்டுவிடுவோம். அகழாய்வாளர்கள் தங்களின் கண்டுபிடிப்புகளில் தொடர்ந்து ஆர்வமாக ஈடுபட்டுள்ளனர். ஆனால் கிறிஸ்தவர்களாக, இந்த நிகழ்வுகள் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்தவை என்பதையும், அவற்றுக்கானச் சான்றுகள் கிடைக்கலாம் அல்லது கிடைக்காமல் இருக்கலாம் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். சான்று இருந்தாலும் கால மாற்றத்தினால் அவை அழிவுக்க உட்பட்டிருக்கலாம். ஆகவே, பின்வரும் கூற்றில் உண்மை உள்ளது: “சான்று இல்லாமை என்பது இல்லாமையின் சான்றாகாது.” மதச்சார்பற்ற நூலறிஞர்கள் ஏற்கப்படும் சான்று கிடைக்காத வரையில் இந்த நிகழ்வுகள் நிகழ்ந்ததை நம்புவதற்கு எந்தக் காரணமும் இல்லை என்று கூறுகின்றனர், மற்ற வகையில் இதை எண்பிக்க ஏற்கப்படும் சான்று கிடைக்காத வரை நாம் இதை நம்புதற்கானக் காரணம் உள்ளது என்று நாம் கூறுவது மிகுந்த ஏரணமுள்ளதாக இருக்கிறது.